# தாய்மார் கழக அங்கத்தவர்களுக்கான கைநூல்



சுகாதார மேம்பாட்டுப் பணியகம்
சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

# முகவுரை

தாய் கழக அமைப்பானது இலங்கையில் அடிமட்ட சமுதாயத்தின் சுகாதாரம் மற்றும் போசணை நிலைமையை மேம்படுத்துவதற்கு அதி முக்கிய பங்களிப்பை வழங்குகின்றது. பிரதேசத்தில் இனங்காணப்படும் சுகாதாரம் மற்றும் போசணை தொடர்பான பிரச்சனைகளை மக்களினாலேயே உணர்ந்து அதற்கான தீர்வுகளை காண்பதற்கு ஆக்கபூர்வமான செயற்பாடுகளின் ஊடாக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் சுகாதார ஊழியர்களுக்கு தமது பணிகளை மேற்கொள்வதற்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

தாய்மார் கழகங்களின் செயற்பாடுகளுக்காக சுகாதார ஊழியர்களுக்கு வழிகாட்டல்கள் சுகாதார மேம்பாட்டு பணியகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் சில சந்தர்ப்பங்களில் தாய்மார் கழக அங்கத்தவர்களுக்கு வழிகாட்டல்கள் வழங்கும் கையேடுகளின் தேவைப்பாடு எழுந்துள்ளது.

கள ஊழியர்கள், தேசிய மட்டத்தில் சுகாதார அமைச்சுடன் இணைந்துள்ள பல்வேறு நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளின் விஷேட மருத்துவ நிபுணர்களின் தொழில்நுட்ப அறிவு மற்றும் தாய் கூட்டு அமைப்பு அங்கத்தவர்களின் கருத்துக்களைப் பெற்று கலந்துரையாடல்களின் பெறுபேறாக இந்த தாய்மார் கழக அமைப்பிற்கான கையேடு சுகாதார மேம்பாட்டு பணியகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த கையேட்டை தயாரிப்பதற்காக உதவி புரிந்த சகலருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதுடன் களத்தில் தாய்மார் கழக செயற்பாடுகளுக்கு தமது பங்களிப்புகளை தொடர்ந்து வழங்குவதற்கான ஊக்கப்படுத்துவதற்கு துணையாகும் என கருதுகின்றேன்.

வைத்தியர் பாலித்த கருணாபெரும

சமூக மருத்துவ நிபுணர்
பணிப்பாளர்,
சுகாதார மேம்பாட்டுப் பணியகம்.

## தாய்மார் கழகம் என்றால் என்ன?

கிராம மக்களின் சுகாதாரம் மற்றும் போசணை தொடர்பான பிரச்சனைகளை இனங்கண்டு அப்பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கான சிறந்த சுகாதார பழக்கங்களை மேம்படுத்தும் பொருட்டு கூட்டாக இணைந்து செயற்படுத்துவதற்காக தமது பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ள தன்னார்வ அமைப்பொன்றாகும்.

**தாய்மார் கழகத்தில் இணையும் உங்களுக்கு**

- குடும்பத்தினுள் தெளிவாக ஆரோக்கியம், சந்தோஷத்திற்கும் ஆரோக்கியத்திற்குமான மாற்றமொன்றை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்.
- கிராம மக்களின் சிறந்த ஆரோக்கிய வாழ்க்கை முறைமை உருவாக்கிக் கொள்ளலாம்.
- கிராம மக்களிடையே சந்தோசத்திற்கான அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும்.
- பாரியளவு முதலீடுகள் இன்றி ஊருக்கு சேவைகள் புரிவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கக்கூடியதாக இருக்கும்.
- ஊரில் கௌரவமாக வாழ்வதற்கு வழிவகுக்கும்.

## தாய்மார் கழகத்தின் முக்கிய நோக்கம்

எமது பிரதேசத்தில் உள்ள மக்களின் அறிவு, எண்ணக்கரு மற்றும் திறமை என்பவற்றை மேம்படுத்திக் கொள்வதன் ஊடாக பிரதேசத்தில் வாழும் மக்களின் சுகாதாரம், போசணை மற்றும் சுற்றுச் சூழல் நிலைமைகளை உயர்த்துவதற்கு சகல தரப்பினருடனும் இணைந்து செயற்படுதல்.

## எமது தாய்மார் கழகத்தின் அடிப்படை அம்சங்கள்

- இது முற்றுமுழுவதாக தன்னார்வ அமைப்பாகும்.
- அங்கத்தவர்கள் 5-20 இற்கு இடைப்பட்ட தொகையினர் உள்ளனர். ஒரு குடும்பத்தில் ஒருவர் வீதம் பங்கு கொள்ளச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் போது அங்கத்துவம் வகிக்கும் அனைவருக்கும் பிரச்சனைகளை கலந்துரையாடுவதற்கு மற்றும் தமது கருத்துக்களை தெரிவிப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

- எங்களுக்கான வழிகாட்டல்கள் வழங்கப்படுவது குடும்பநல உத்தியோகத்தர்களினால் ஆகும்.


- ஊரில் பெண்கள், ஆண்கள் திருமணமானவர்கள், திருமணமாகாதவர்கள் போன்ற எவருமே இதில் அங்கத்துவம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க முடியும்.

- ஒவ்வொரு மாதமும் எமது அங்கத்தவர்கள் ஒன்று கூடுகின்றனர்.

- தாய்மார் கழகத்தின் நோக்கத்தை அடைவதற்கு தேவையான தகவல்கள் மற்றும் அனுபவங்கள் என்பன நாங்கள் இதன்போது பரிமாறிக் கொள்கின்றோம்.

- கண்டறியப்பட்ட முக்கிய பிரச்சனைகள் தொடர்பாக கலந்துரையாட வேண்டிய தலைப்பு எங்களால் தீர்மானிக்கப்படும்.





கர்ப்பிணி
தாய்மார்கள்
தாய்மார்கள
(விஷேடமாக சிசுக்கள்
மற்றும் 1-5 வயதிற்கு
இடைப்பட்ட குழந்தைகள்
உள்ள தாய்மார்கள்)
தாத்தா / பாட்டி
தாய்மார் கழகத்தின்
அங்கத்தவர்கள
சமூகத்
தலைவர்கள
ஓய்வு பெற்ற
ஊழியர்கள்
இளைஞர்கள
யுவதிகள
கணவர்கள
தந்தைமார்
இது தொடர்பாக
ஆர்வம் கொண்ட
எந்தவொரு

## தாய்மார் கழகத்தின் அங்கத்தவர்களான நாம்

- அதிகாரிகள் குழுவொன்றை உத்தியோக பூர்வமாக நியமித்துக்கொள்வோம்.
- மாதாந்தம் நடைபெறும் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்வோம்.
- பரஸ்பர நம்பிக்கை மற்றும் கௌரவத்தை பாதுகாத்துக் கொள்வோம்.
    - தாய்மார் கழகத்தினூடாக பரிமாறப்பட்ட ஏதாவது தனிப்பட்ட அனுபவங்கள் மற்றும் முக்கிய தகவல்கள் குழுவிற்கு வெளியே கலந்துரையாடுவதை தவிர்த்துக் கொள்வோம்.
    - மற்றவர்களின் கருத்துக்களை கூர்ந்து அவதானிப்போம்.
    - அங்கத்தவர்கள் யாரும் தமது கருத்துக்களை தெரிவிக்கும் போது அவர்களுக்கு இடையூரின்றி இருப்போம்.
    - ஒருவருக்கொருவர் தேவையான ஆதரவுகளை தாராளமாக வழங்குவோம்.
    - அங்கத்தவர்களுக்கு இடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகள் சுமூகமாக கலந்துரையாடப்பட்டு அமைதியாக தீர்த்துக் கொள்ள முயற்சிப்போம்.
- நாங்கள் எமது அனுபவங்களை பரிமாறிக்கொள்வோம்.
- குடும்பங்களிடையே மற்றும் சமூகத்துக்கிடையே சுகாதாரம் சார்ந்த அறிவு மற்றும் சுகாதார பழக்கங்களை பகிர்ந்து கொள்வோம்.
- ஓர் அணி என்ற உணர்வுடன் செயற்படுவோம்.
- மக்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுப்போம்.
- முன்னைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட செயற்பாடுகளை பூர்த்திசெய்வதற்காக அர்ப்பணிபுடன் செயற்படுவோம்.
- செயற்பாடுகளின் வெற்றிகள் மற்றும் தோல்விகள் தொடர்பாக மதிப்பீடு செய்வதற்கு அனைவரும் ஒன்றாக இணைந்து செயற்படுவோம்.
- எமது வெற்றிபோன்றே தோல்வியையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய திறனை வளர்ப்போம்.

## தாய்மார் கழகத்தின் தலைவரின் பொறுப்பு

- கூட்டம் கூடும் திகதி, நேரம் மற்றும் இடம் தொடர்பாக அறிவித்தல்.
- முறையான தொடர்பாடல் வலையமைப்பை பராமரித்தல்.
- கலந்துரையாட வேண்டிய தலைப்பு தொடர்பாக குடும்பநல உத்தியோகத்தர், பொது சுகாதார பரிசோதகர் மற்றும் அங்கத்தவர்களின் ஒத்துழைப்புடன் தீர்மானம் எடுத்தல்.
- தேவையான சந்தர்ப்பங்களில் சுகாதார பணி ஊழியர்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளல்.
- செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பாக குடும்பநல உத்தியோகத்தர் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்களுக்கு அறிவித்தல்.
- உரிய ஏனைய தரப்பினர்களினதும் (இணைப்பு 1) உதவிகளை பெற்றுக்கொள்ளல்.
- செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது அங்கத்தவர்களின் இணக்கத்திற்கு அமைய சகலருக்கும் பொறுப்புக்களை பகிர்ந்தளித்தல்.
- அனைத்து அங்கத்தவர்களுக்கும் சமமான சந்தர்ப்பங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- பொதுக் கூட்டங்களில் தாய்மார் கழகத்தை பிரதிநிதிப்படுத்தல்

அர்ப்பணிப்புடனும் ஒரே அணி எனும் உணர்வுடனும் நடவடிக்கை மேற்கொள்ளும் போது திறமையான அங்கத்தவர்களைக்கொண்ட குழு தலைமைத்துவத்தை நியமிப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

## எமது தாய்மார் கழகத்தின் செயலாளரின் பொறுப்புகள்:

- அறிக்கைகள் தயாரித்து பராமரித்தல்.
- சென்ற கூட்ட அறிக்கை சமர்ப்பித்தல்.
- மாதிரிப்படிவம் A (இணைப்பு-2) குடும்பநல உத்தியோகத்தருக்கு சமர்ப்பித்தல்.
- சகல அங்கத்தவர்களின் விபரங்களை ஒன்று திரட்டி பராமரித்தல் (இணைப்பு-3)

## எமது தாய்மார் கழகத்தின் பொருளாளரின் பாறுப்புகள்:

- தாய்மார் கழக நிதியத்தை முகாமைத்துவம் செய்தல்.



## சுகாதார பணி ஊழியர்களினால் எமக்கு ழிகாட்டல்கள் வழங்கப்படும்.

**சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு மட்டத்தில்**

- சுகாதார மருத்துவ அதிகாரி / மேலதிக சுகாதார மருத்துவ அதிகாரி
- பொது சுகாதார தாதியர் சகோதரி
- நிர்வாக குடும்பநல உத்தியோகத்தர்
- நிர்வாக பொது சுகாதார பரிசோதகர
- குடும்பநல உத்தியோகத்தர்
- பொது சுகாதார பரிசோதகர்

**மாவட்ட மட்டத்தில்**

- மாவட்ட சமுதாய மருத்துவ விஷேட நிபுணர்
- மாவட்ட தாய் சேய் சுகாதார மருத்துவ அதிகாரி
- சுகாதார கல்வி உத்தியோகத்தர்
- பிராந்திய நிர்வாக பொது சுகாதார தாதியர் சகோதரி
- மாவட்ட நிர்வாக சுகாதார பரிசோதகர்

→ தாய் கூட்டு அமைப்பு ←

### எமது கூட்டங்கள் நடாத்தும் போது



1. **நேரம்**

   அங்கத்தவர்களாகிய எமது நாளாந்த பணிகளில் தடைகளை ஏற்படுத்தாத நேரம்



**2. இடம்**

பிள்ளைகளுடன் வருகின்ற எமது அங்கத்தவர்களுக்கு பிள்ளைகளுக்கு பாதுகாப்பான இடம். அரசியல் தொடர்புபட்ட நிலையங்கள் எதையும் இதற்காக பயன்படுத்தாதிருப்போம்.

**3. அணுகுவதற்கான வசதிகள்**

அங்கத்தவர்கள் இலகுவாக அணுகுவதற்கு பொருத்தமான இடம்.



**4.** எமது அங்கத்தவர்கள் அனைவரும் வட்ட அல்லது அரை வட்ட வடிவத்தில் அமர்வதற்காக ஆசனங்களை ஒழுங்குபடுத்தல்.

**5.** நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப எமது கூட்டங்களை நடாத்தப்படும்.

**6.** வருகை புத்தகத்தில் வருகை தந்த அனைவரினதும் கையொப்பத்தை பெற்றுக்கொள்ளல்.

**மாதிரி நிகழ்ச்சி நிரல்**

| | |
|---|---|
| 1. | மத வழிபாடு |
| 2. | வரவேற்றல் |
| 3. | சென்ற கூட்ட அறிக்கை மீளாய்வு |
| 4. | புதிய அங்கத்தவர்களை அறிமுகம் செய்தல் |
| 5. | முந்னைய இணக்க செயற்பாடுகளின் முன்னேற்ற மீளாய்வு |
| 6. | சிறப்பு சொற்பொழிவு |
| 7. | வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தல் |
| 8. | முன்மொழிவுகள் மற்றும் கலந்துரையாடல், புதிய செயற்பாடுகளை திட்டமிடல் |
| 9. | புதிய அறிவு மற்றும் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளல் |
| 10. | ஏனைய பிரச்சனைகள் மற்றும் ஆலோசணைகள் கூறுவதற்கான சந்தர்ப்பம் |
| 11. | ஏனைய அறிவிப்புகள் |
| 12. | அடுத்த கூட்டம் நடைபெறுவதற்கான திகதி மற்றும் நேரம் |
| 13. | நிறைவு |

## தாய்மார் கழகத்தினூடாக நிறைவேற்றிக் கொள்ளக்கூடியவை

- பிரச்சனைகளை இனங்காணும் போது சகல ங்கத்தவர்களினதும் கருத்துக்களை கேட்போம்
- அப்பிரச்சனைகளுக்கு முன்னுரிமை வழங்குவோம்
- குடும்பநல உத்தியோகத்தர், பொது சுகாதார பரிசோதகரின் ஒத்துழைப்புடன்:
  - ➢ பிரதான பிரச்சனைகளை இனங்கண்டு செயல்ரீதியான திட்டங்களை வகுப்போம்
  - ➢ செயற்பாடுகளின் வெற்றியை மதிப்பீடு செய்வதற்கு குறிகாட்டிகளை தயாரித்துக் கொள்வோம
  - ➢ குறிகாட்டிகளை பயன்படுத்தி வெற்றியை அளவிடுவோம
  - ➢ முடியுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் சுகாதார துறைகளின் வெளியே பல்வேறு தரப்பினரினதும் ஒத்துழைப்புகளை பெற்றுக் கொள்வோம்

## கூட்டத்தின் முடிவில்...


1. முக்கியத்துவம் பெறும் தலைப்பு, விடயம் மற்றும் கொடுக்கல் வாங்கல் தொடர்பான தீர்மானங்கள் சாரம்சம் செய்து கொள்ளப்படும்.
2. மேலதிக கேள்விகள், கருத்து தெரிவித்தல் மற்றும் தெளிவு படுத்தல்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படும்.
3. வருகை தரும் அனைத்து அங்கத்தவர்களுக்கும் நன்றி தெரிவித்தல்
4. கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டவை மற்றும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக சுருக்க குறிப்புகளை வைத்துக்கொள்ளல்
5. குடும்பநல உத்தியோகத்தர்களுக்கு அதில் பிரதியொன்று அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.



**அறிக்கை மற்றும் குறிப்புகள் பராமரிக்கப்படும் போது பின்வரும் விடயங்களுக்கு அவதானம் செலுத்துவோம்.**

- கலந்து கொண்ட அங்கத்தவர்களின் பெயர் பட்டியல்
- எம்மால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் உரிய குறிகாட்டிக்கு அமைய அவற்றின் வெற்றி
- எடுக்கப்படும் தீர்மானங்கள் மற்றும் தீர்வுகள்
- நிறைவேற்ற வேண்டிய பணிகள் மற்றும் பொறுப்புகள், காலம்
- பெற்றுக்கொண்ட பயிற்சி சந்தர்ப்பங்கள்
- முக்கிய அறிவிப்புகள்
- அடுத்த கூட்டத்திற்கான திகதி மற்றும் நேரம்

## எமது தாய்மார் கழகத்தின் கட்டிட கோபுரம்




**நம்பிக்கை**

- சகலரும் தமது கருத்துக்களை சமர்ப்பித்தல்
- சகலரும் அடுத்தவர்களின் கருத்துக்களுக்கு செவி சாய்த்தல்
- குழுக்களாக எடுக்கப்படும் தீர்மானம் வலுமிக்கது

**நேர்மை**

- பிறரின் நன்மை கருதி
- எல்லோருக்கும் நன்மை தரக்கூடியது
- அர்ப்பணிப்புடன் செயலாற்றுதல்

**செவிசாய்த்தல்**

- அனைவரினாலும்
- திறந்த மனதுடன்
- தமது கருத்துக்களை தெரிவிப்பதை விடவும் மற்றவர்களின் கருத்துக்கு செவி சாய்த்தல்

**வெளிப்படை தன்மை**

- மற்றவர்களின் கருத்துக்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்காக
- புதிய கருத்துக்களை தெரிவிப்பதற்கு
- தமது கருத்துக்களை தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம்

## இணைப்பு 1

## தாய்மார் கழகத்திற்கு பல்வேறு தரப்பினர்களின் ஒத்துழைப்புகள்

பல்வேறு தரப்பினர்களினதும் ஒத்துழைப்புகளுடன் செயற்படுவதன் ஊடாக மக்களின் சுகாதாரம் மற்றும் போசணை நிலைமையை சிறந்த நிலைக்கு உயர்த்தலாம். இதன் போது மக்களின் பொருளாதார மட்டத்தை உயர்த்துவதற்கான புதிய வருமான வழிமுறைகளை வகுத்தல் மற்றும் வரவு செலவு முகாமைத்துவம் தொடர்பான திறமைகளை வளர்ப்பதற்கும் மிகவும் உதவுகின்றது.

மக்களின் /சமூகத்தின் சுகாதார நிலைமைக்கு நேரடியாக தாக்கம் செலுத்தக்கூடிய ஆனாலும் சுகாதார துறையுடன் தொடர்பு படாத செயற்பாடுகளை சிறந்த முறையில் ஏற்பாடு செய்யும் போது இந்த ஒத்துழைப்புகள் பெரிதும் உதவும்.

அவ்வாறான தரப்பினர்கள் பிராந்திய /கிராம மட்டத்தில்

உதாரணங்களாக:

- மதத்தலைவர்கள்
- கிராம அலுவலர்கள்
- விவசாய அதிகாரிகள், விவசாய ஆலோசகர்கள், விவசாய உற்பத்தியாளர்கள்
- சமூர்த்தி உத்தியோகத்தர்கள்
- அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
- சமூக நல உத்தியோகத்தர்கள்
- சிறுவர் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்புகள்
- நன்நடத்தை அலுவலர்கள்
- ஆலோசனை உத்தியோகத்தர்கள்
- சமூக சேவை அலுவலர்கள்
- பொலிஸ் உத்தியோகத்தர்கள்
- அரச நிறுவன உத்தியோகத்தர்கள் - நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, சுற்றுச்சூழல் அதிகாரசபை, பிரதேச சபை, நகர சபை

**இணைப்பு 2**

**தாய் மார் கழக முன்னேற்ற மீளாய்வு மற்றும் மேற்பார்வை செய்வதற்கான படிவம்**

**மாதிரிப்படிவம் A:** அணி தலைவர்/ செயலாளரினால் பூர்த்தி செய்து மாதாந்தம் குடும்பநல உத்தியோகத்தருக்கு கையளித்தல் வேண்டும்.

தாய்மார் கழகத்தின் பெயர் : ........................................
கூட்டம் நடைபெறும் திகதி : ........................................
இடம் : ........................................
அங்கத்தவர்களின் எண்ணிக்கை : ....................................
வரவு (பங்குபற்றிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை) : .............
கலந்துரையாடப்பட்ட தலைப்பு :
..........................................................................................
..........................................................................................

தாய் மார் கழகத்தினூடாக ஊடாக செய்யப்பட்ட / மேற்கொள்வதற்கு இணக்கம் கண்ட செயற்பாடுகள் :
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

கிடைத்த வெற்றி :

..........................................................................................
..........................................................................................

எடுக்கப்பட்ட தீர்மானங்கள் :
..........................................................................................
..........................................................................................

அடுத்த கூட்டம் ( திகதி மற்றும் இடம்) :
..............................................................................

........................................ ..............................

குழு தலைவர் செயலாளர் (கையொப்பம்)

# இணைப்பு 3

## வழிகாட்டல்

**வைத்தியர் பாலித கருணாபேம**

சமுதாய மருத்துவ விஷேட நிபுணர், பணிப்பாளர்,
சுகாதார மேம்பாட்டு பணியகம்.

**வைத்தியர் பபா பலிகவடன**

தொற்றுநோய் மருத்துவ விஞ்ஞானி, முன்னால் பணிப்பாளர்,
சுகாதார மேம்பாட்டு பணியகம்.

## சீராக்கம்

**வைத்தியர் சுபுன் விஜேசிங்க**
சமுதாய மருத்துவ விஷேட நிபுணர், சுகாதார மேம்பாட்டு பணியகம்.

**வைத்தியர் சிறியாணி ரணசிங்க**
சமுதாய மருத்துவ விஷேட நிபுணர், சுகாதார மேம்பாட்டு பணியகம்.

**வைத்தியர் செரின் பாலசிங்கம்**
சமுதாய மருத்துவ விஷேட நிபுணர், சுகாதார மேம்பாட்டு பணியகம்.

**வைத்தியர் தனுஷ்க அபேகுணதிலக்க**
பதிவாளர், சுகாதார மேம்பாட்டு பணியகம்.

**வைத்தியர் சுமுது ராஜசிங்க**
பதிவாளர், சுகாதார மேம்பாட்டு பணியகம்.

**வைத்தியர் சன்ஜீவனி கருணாரத்ன**
மருத்துவ அதிகாரி, சுகாதார மேம்பாட்டு பணியகம்.

**வைத்தியர் சந்திமா விதான**
மருத்துவ அதிகாரி, சுகாதார மேம்பாட்டு பணியகம்.

**வைத்தியர் லசந்த விஜேசேகர**
மருத்துவ அதிகாரி, சுகாதார மேம்பாட்டு பணியகம்.

## வள பங்களிப்பாளர்கள்

**வைத்தியர் ரன்ஜித் படுவன்துடாவ**
சமுதாய மருத்துவ விஷேட நிபுணர், சுகாதார மேம்பாட்டு பணியகம்.

**வைத்தியர் அஜித் அலகியவன்ன**
சமுதாய மருத்துவ விஷேட நிபுணர், சுகாதார மேம்பாட்டு பணியகம்.

**வைத்தியர் அசந்தி பலப்பிட்டிய**
சமுதாய மருத்துவ விஷேட நிபுணர், சுகாதார மேம்பாட்டு பணியகம்.

**வைத்தியர் அமந்தி பந்துசேன**
சமுதாய மருத்துவ விஷேட நிபுணர், தோட்டப்புற மற்றும் நகர்புற சுகாதார பிரிவு

**வைத்தியர் ஹிரன்யா ஜயவிக்கிரம**
சமுதாய மருத்துவ விஷேட நிபுணர், குடும்பநல பணியகம்.

**வைத்தியர் நெத்மினி தேனுவர**
சமுதாய மருத்துவ விஷேட நிபுணர், குடும்பநல பணியகம்.

**வைத்தியர் புத்திகா சுதசிங்க**
சிரேஷ்ட பதிவாளர், சுகாதார மேம்பாட்டு பணியகம்.

**வைத்தியர் எஸ்.லியனகே**
பதிவாளர், குடும்பநல பணியகம்.

**வைத்தியர் பிரியங்கா சமரவிக்ரம**
மருத்துவ அதிகாரி, சுகாதார மேம்பாட்டு பணியகம்.

**வைத்தியர் அசினி திலகரத்ன**
மருத்துவ அதிகாரி, குடும்பநல பணியகம்.

**வைத்தியர் பிரியானி கருனாரத்ன**
மருத்துவ அதிகாரி/ தாய், சேய் சுகாதாரம், களுத்துறை

**வைத்தியர் டி.சீ வெல்கம**
மருத்துவ அதிகாரி/ தாய், சேய் சுகாதாரம், இரத்தினபுரி.

**வைத்தியர் கே.எச்.ஜே குமார**
சுகாதார மருத்துவ அதிகாரி, ஹோமாகம.

**வைத்தியர் டி.ஜே. கலப்பத்தி**
மேலதிக சுகாதார மருத்துவ அதிகாரி, பத்தரமுல்ல.

**திருமதி சுநேத்ரா மெனிகே**
ப.க பிரதான சுகாதார கல்வி அதிகாரி, சுகாதார மேம்பாட்டு பணியகம்.

**திரு ஜே.ஏ.எம் பிரசாத்**
சுகாதார கல்வி அதிகாரி, இரத்தினபுரி.

**திரு சந்திமால் நாணாயக்கார**
சுகாதார கல்வி அதிகாரி, காலி.

**அனோமா ஜயந்தி பீரிஸ்**
பொது சுகாதார தாதி சகோதரி, கலிகமுவ.

**டப்ள்யு. டப்ள்யு. பிரியதர்சனி**
பொது சுகாதார தாதி சகோதரி, மாத்தறை.

**எஸ்.டி.பீ.எம். விஜேயசிறிவர்தன**
நிர்வாக குடும்பநல உத்தியோகத்தர், நியாகம

**ஆர்.ஏ தமரா**
நிர்வாக குடும்பநல உத்தியோகத்தர், மாத்தறை

**டி.எச்.எல்.வீ. தர்சனிக்கா**
குடும்பநல உத்தியோகத்தர், பாணந்துறை.

**எல்.பீ.ஜயவிக்கிரம**
குடும்பநல உத்தியோகத்தர், மாவத்தகம

**பீ.எல்.எஸ் சுபசிங்க**
குடும்பநல உத்தியோகத்தர், கலிகமுவ.

**டப்ள்யு.ஏ.எம்.எம் வீரசேகர**
குடும்பநல உத்தியோகத்தர், பத்தரமுல்ல.

**எச். ஏ. ரன்ஜனி**
குடும்பநல உத்தியோகத்தர், மத்பத்தரை, அயகம

**வெளி அட்டை**
தனுஷ்க ஹரசரங்க, சுகாதார மேம்பாட்டு பணியகம்.

**மொழி பெயர்ப்பு** : திருமதி எச்.ஜே.ஆர் பேகம்

இந்த கையேடு தயாரிப்பதற்கு பங்களிப்பு செய்த பிரதேச, மாவட்ட மற்றும் மாகாண சுகாதார சேவை நிறுவனங்களில் சேவையாற்றும் சகல அலுவலர்கள் மற்றும் தாய்மார் கழகத்தின் (Mother's Support Group) அங்கத்தவர்களுக்கும் சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் நன்றிகள்

# குறிப்பு

**இணைப்பு 3**

அங்கத்தவர்களின் விபரங்கள்

| இல | பெயர் | வயது | தொழில் | முகவரி | தொலைபேசி இலக்கம் | குடும்ப விபரம் | | | | | | | ஏனைய |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிள்ளைகளின் எண்ணிக்கை | 05 வயதிற்கு குறைந்த பிள்ளைகளின் எண்ணிக்கை | 05-15 வயதிற்கு இடைப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை | கர்ப்பிணி தாய்மார்கள் | | பாலூட்டும் தாய்மார்கள் | | |
| | | | | | | | | | ஆம் | இல்லை | ஆம் | இல்லை | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |

சுகாதார மேம்பாட்டுப் பணியகம்
தொலைபேசி : +94112696606
http://www.healthpromo.gov.lk